(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 282]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2013 யூன் 18, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2415/ '12

1.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "இலங்கை அபிவிருத்திச் சேவை" என்ற பெயரில் அரச தொழில் வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதன் கீழ் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகளின் குறைந்தபட்ச தகமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு நிரந்தரமானதும் ஓய்வூதியம் உள்ளதுமான பதவிகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iv) அந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் நடைமுறை யாது என்பதையும்;

(v) சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கு ஒப்படைக்கப்படும் கடமைப் பொறுப்புக்கள் யாவை என்பதையும்;

(vii) இதன் கீழ் ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(viii)அரச சேவையில் வெற்றிடங்கள் பெருமளவில் நிலவும் போது அந்த வெற்றிடங்களை நிரப்பாமல் இச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2454/ '12

2.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு.— (1)

(அ) (i) வெலிகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் கம்புறுகமுவ மெதகொடவில் அரசாங்க தாதியர் பயிற்சிக் கல்லூரியொன்று காணப்படுகிறது என்பதையும்;

(ii) மேற்படி தாதியர் பயிற்சிக் கல்லூரியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் குழாத்திற்குப் போதுமான இட வசதிகளும் தங்குமிட வசதிகளும் இல்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக மேற்படி கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவியரில் ஒரு பகுதியினர் ஸ்ரீ ஜயவர்தனபுர தாதியர் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தாதியர் கல்லூரியை மூடிவிடுவதற்கான ஆயத்தங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறு இல்லாவிடின், குறித்த கல்லூரியை வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கான திட்டம் உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், மேற்படி கல்லூரியை கொண்டுசெல்வதற்கு உத்தேசித்துள்ள இடம் யாதென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2566/ '12

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெந்தர ஆற்றின் இடது கரை மற்றும் வலது கரைக் கருத்திட்டங்களுக்குச் சொந்தமான பெருமளவிலான வயற்காணிகள் பாழடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) "பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி வயற்காணிகளில் மீண்டும் பயிரிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மீள் பயிரிடும் வேலைத் திட்டத்தின் பின்னர் மேற்படி வயற்காணிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பெந்தர ஆற்றின் ஊடாக பெருக்கெடுக்கும் கடல் நீர் காரணமாக மேற்படி வயற்காணிகள் அழிந்து வருவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) கடல் நீர் வயற்காணிகளுக்கு பெருக்கெடுப்பதைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2828/ '12

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 முதல் 2011 வரை இலங்கையில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ள சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) சீன நாட்டவர்களுக்கு வீசா தேவைப்பாடுகளில் அத்தகைய மிகுந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும்;

(iii) நாட்டிலே பெருமளவிலான வேலைவாய்ப்பின்மை உள்ளபொழுது பெரும் எண்ணிக்கையிலான சீனத் தொழிலாளர்களை வைத்திருப்பது எவ்வாறு நியாயப்படுத்தப்படும் என்பதனையும்;

(iv) பெரும் எண்ணிக்கையிலான சீனத்தொழிலாளர்களுக்குத் தொழில் வழங்குவதற்கான அனுமதியை அங்கீகரிப்பதனால் நாட்டிற்கு ஏற்படும் வருமான இழப்பையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2972/ '12

5.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையைக் கூட செலுத்த முடியாதளவுக்கு மத்திய மாகாண சபை பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகை அந்த மாகாண சபையின் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட போதிலும் அந்தப் பணம் ஊழியர்களின் ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு மத்திய மாகாண சபையினால் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இதுவரை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகைக்காக கழிக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு செலுத்தப்பட இருந்த பணத்தை அந்த கணக்குகளில் வரவு வைக்க முடியாமைக்கான காரணம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மத்திய மாகாண சபை ஊழியர்களின் பங்களிப்புத் தொகைகளை இவர்களது ஓய்வூதிய கணக்குகளில் வரவு வைப்பதற்கும்;

(ii) இந்த மாகாண சபையில் நிலவும் நிதி மோசடி தொடர்பாக ஆராய்வதற்கும்;

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3205/ '12

6.

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுராதபுர மாவட்டத்திலுள்ள மொத்த பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் சேவையாற்றும் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவர்களது பெயர், முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி பாலர் பாடசாலை ஆசிரியர்களை அரச நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலர் பாடசாலைகள் பேணிவரப்படுகின்ற கட்டிடங்களின் நிலைமை யாதென்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் அற்ற பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மின்சார வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) பாலர் பாடசாலைகளுக்கென ஏதேனும் கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா என்பதையும்

(v) ஆமெனின் அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மின்சாரம், மலசலகூடம், கட்டிடம் ஆகிய வசதிகளற்ற பாலர் பாடசாலைகளுக்கு மேற்படி வசதிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வட மத்திய மாகாண சபையினால் பாலர் பாடசாலைகளுக்கு பாலர் பாடசாலைகளுக்காக வழங்கப்படும் வசதிகள் யாவை என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3209/ '12

7.

கௌரவ ஆர்.எம். ரன்ஜித் மத்தும பண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2012 மே 01 உலக தொழிலாளர் தினத்தில் அதிமேதகு ஜனாதிபதி இ.போ.ச. ஓய்வுபெற்ற ஊழியர்களில் சிறு தொகையினருக்கு மாத்திரம் அடையாள ரீதியில் நிலுவை ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) 1978-1991 காலத்தினுள் பணியாற்றி ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்களில்,

(i) முழுமையாக ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஓய்வூதிய பணிக்கொடையில் ஒரு பகுதி மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி இ.போ.ச. ஊழியர்களின் நிலுவை ஓய்வூதியப் பணிக்கொடையை துரிதமாக வழங்குமாறு வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு இதுவரை எவ்வளவு காலம் கடந்துள்ளது என்பதையும்;

(ii) இ.போ.ச. ஓய்வுபெற்றோர்களின் நிலுவை ஓய்வூதியப் பணிக்கொடையை துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3287/ '12

8.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் நகரில் தபால் அலுவலகமொன்று இல்லாமையினால் இப்பிரதேச மக்கள் கடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) ஹிதாயாபுரத்தில் பொத்துவில் மத்திய மகா வித்தியாலய வீதியில் இயங்கிவந்த உப தபால் அலுவலகம் மூடப்பட்டமையால் மக்கள் கடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) பொதுமக்கள் முகம் கொடுக்கின்ற மேற்படி பிரச்சினைகளை கருத்திற்கொண்டு பொத்துவில் நகரில் உப தபால் அலுவலகமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2521/ '12

9.

கௌரவ புத்திக பதிரண,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 முதல் 2005 ஒக்டோபர் வரை நியமிக்கப்பட்ட நிறைவேற்றதிகாரமுடைய சனாதிபதிகள் வழங்கியுள்ள சனாதிபதியின் பொதுமன்னிப்பு முறைமையின் கீழ் சிறைத் தண்டனைகளிலிருந்து விடுதலைசெய்யப்பட்வர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வாறு விடுதலை பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

ஆண்டு ரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2568/ '12

10.

கௌரவ சஜித் பிரேமதாச,— துறைமுக, நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுரலியவில் இருந்து ஹெடிகல்ல வரையான வழியில் தொடங்குகின்ற மெல்லகஹவில தொடக்கம் நெலுவ வரையான வீதி பல வருடங்களாக சிதைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வீதியானது பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குச் செல்வதற்காக பெரிதும் பாவிக்கப்படுகின்ற வீதியென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியானது பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2796/ '12

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கனேவத்த பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின் தொஸ்தரவத்த எனப்படும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மணல் அகழ்வை மேற்கொள்பவரின் பெயர் யாதென்பதையும்;

(iv) இதற்காகப் பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மணல் அகழ்வுக்கு ஏற்புடையதான சுற்றாடல் சாத்திய வள அறிக்கையையும் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் அறிக்கையையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி இடத்திலிருந்து நாள் ஒன்றுக்கு அகழ்வதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ள மணல் கியூப்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி மணல் அகழ்வுக்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தின் கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தொஸ்தரவத்த எனப்படும் இடத்தில் மேற்கொள்ளப்படுகின்றதான மணல் அகழ்வு காரணமாக பாரிய சுற்றாடல் அழிவு இடம்பெறுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதுவரை அங்கு இடம்பெற்றுள்ள சுற்றாடல் அழிவு சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2857/ '12

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டில்,

(i) இலங்கை மத்திய வங்கியின் மூலம் அரசாங்கத்தினால் பேணப்பட்ட மொத்த தங்க ஒதுக்கம் எவ்வளவு என்பதையும்;

(ii) அரசாங்கத்தினால் விற்பனை செய்யப்பட்ட தங்கத்தின் அளவு யாதென்பதையும்;

(iii) அவை விற்பனை செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தங்கத்தைக் கொள்வனவு செய்த தரப்பினர் யாவர் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அரசாங்கத்தினால் பேணப்பட வேண்டிய மொத்த தங்கத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட அளவுத் தங்கத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தகைய தங்கம் அரசாங்கத்தினால் எவ்வாறு சேகரிக்கப்பட்டது என்பதையும்;

(iv) 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தங்க ஒதுக்கங்கள் எவ்வாறு தளம்பலுக்குள்ளானது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) இலங்கை அரசாங்கத்தினால் பேணப்பட்ட வெளிநாட்டு தங்க ஒதுக்கங்களின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு தங்க ஒதுக்கங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) வெளிநாட்டு தங்க ஒதுக்கங்களிலிருந்து விற்பனை செய்யப்பட்ட அளவு யாதென்பதையும்;

(iv) தங்கத்தை விற்பனை செய்ய அல்லது அதனை வைத்திருப்பது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளும் நபர் யாரென்பதையும்

அவர் கூறுவாரா

(ஈ) இன்றேல் ஏன்?

3043/ '12

13.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) பெருந்தொகையான செலவினத்துடன் 2 கட்டங்களின் கீழ் பொருத்தப்பட்ட கண்டி நகரத்தின் வர்ண சமிக்ஞை முறைமை 14 வருட காலமாக செயலிழந்த நிலையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வர்ண சமிக்ஞை முறைமைகளை பொருத்தும் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களில் பொருத்தப்பட்ட வர்ண சமிக்ஞை முறைமைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்கள் செயற்படுத்தப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கண்டி நகரத்தில் காணப்படும் வாகன நெரிசலுக்கான தீர்வாக பொருத்தப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட வர்ண சமிக்ஞை முறைமைகளை பயனுள்ள விதத்தில் உபயோகிக்க முடியாத நிலைமையில் அதற்கு மாற்று வழிமுறையொன்று திட்டமிடப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2522/ '12

14\.

கௌரவ புத்திக பத்திரண,—சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்திற்காக 2011ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்டதின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்ட பணத்தில் செலவுசெய்யப்பட்ட உண்மையான செலவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2012 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மேற்படி நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் திறைசேறி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புகளில் பணத்தை முதலீடு செய்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர், குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2798/ '12

15\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பாதுகாக்கப்பட்ட வனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டிலும் 2012 ஆம் ஆண்டிலும் மேற்படி பாதுகாக்கப்பட்ட ஒவ்வொரு வனத்திற்கும் உரியதாகவிருந்த நிலப் பரப்புக்கள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குரிய நிலப் பரப்புக்கள் குறைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குரிய நிலப் பரப்புக்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் இருப்பார்களாயின் அவர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) பாதுகாக்கப்பட்ட வனங்களுக்குரிய காணித்துண்டுகள் சட்ட ரீதியாக வழங்கப்பட்டிருப்பின், அக்காணிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) இக்காணிகளை வழங்கிய அதிகாரிகள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட வனங்களுக்கு சேதம் விளைவித்த நபர்கள் யாவர் என்பதையும்;

(ii) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சேதங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ (வண) அதுரலிய ரதன தேரர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"அலவி மௌலானா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை (நீக்கம்) — இரண்டாம் மதிப்பீடு

* 2.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் - விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2013, யூன் 06) [1].

* 4.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

13.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

17.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

19.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.